2.0 அறிவிப்பினை சமர்ப்பிப்பதற்கான செயல்முறை

2.1 அறிவிப்பினை சமர்ப்பிப்பதற்கு எல்லா இறக்குமதியாளர்களும் மற்றும் தீர்வு முகவர்களும் SLSI இல் பதிவு செய்ய வேண்டும். SLSI இன் இணையத்தளத்தில் (www.slsi.lk) இது தொடர்புடைய விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ள முடியும். பதிவு செய்தல் முடிவடைந்ததும் SLSI யானது National Single Window www.nationalsinglewindow.gov.lk இணையத்தளத்தில் உள் நுழைவதற்கான பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை வழங்கும்.

2.2 இலங்கையின் பணிமொழியில் (English) பின்வரும் துணை ஆவணங்களுடன் முறையாக நிரப்பப்பட்ட அறிவிப்பு படிவத்தை இறக்குமதியாளர் பதிவேற்ற வேண்டும்.

a. வணிக விலைப்பட்டியல் பிரதி.

b. அனுப்பு பொதியில் அடங்கும் தொகுப்புகளும் மற்றும் ஒவ்வொரு தொகுப்பின் அளவையும் பிரதிபலிக்கும் பொதுப்பட்டியலின் பிரதி

c. கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு பிரதி

d. சுங்க நுழைவு எண்ணுடன் சுங்க அறிவிப்பு பிரதி அறிவிப்பை சமர்ப்பிக்கும்போது சுங்க நுழைவு எண்ணுடனான பிரதி சமர்ப்பிக்க முடியாது போனால் வங்கி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

e. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதாவது இணக்க சான்றிதழ் (cc), அனுப்புத்தொகுதியானது பல தொகுதிகள் மற்றும் வெவ்வேறு வடிவமைப்புக்களை கொண்டிருந்தால் ஒவ்வொரு தொகுதிக்கும் மற்றும் வடிவமைப்புக்கும் இணக்க சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

2.3 ஒவ்வொரு விலைப்பட்டியலுக்கும் மற்றும் ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு கட்டளைகளில் உள்ளடங்குமாயின் வெவ்வேறு அறிவிப்பை பதிவேற்ற வேண்டும்.

2.4 கூறு 1.1.2 இல் குறிப்பிடப்பட்டதன்படி, பொருத்தமான இலங்கை கட்டளைகளுக்குரிய அனுசரணையை அனுப்புபொதி வெளிப்படுத்த cc பிரதி அறிவிப்பு படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். அனுப்பு பொதிக்கு ஏற்ற ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய cc இருக்குமானால் முன் ஏற்றுமதிக்கான cc யின் மூலப்பிரதி பணிப்பாளர் நாயகம், SLSI இற்கு சான்றளிக்கும் முகவரால் அனுப்பப்பட வேண்டும். செயலாக்கத்தை விரைவுபடுத்த முன் பிரதி SLSI இற்கு தொலை நகல் படுத்தப்பட வேண்டும். (Fax No: 0094-11-2671579 / 0094-11-5354320). முன் ஏற்றுமதிக்கான cc, SLSI இற்கு தொலைநகல்படுத்தப்படின், மூலச் சான்றிதழும் SLSI இற்கு அனுப்பப்பட வேண்டும்.

2.5 முன்வாயிலினூடாக அறிவிப்பு படிவத்தை பெற்றதும், அனுப்புபொதி ஆய்வுக்கா அல்லது மாதிரியுடன் சோதனைக்கு உட்படுத்தப்படவா என SLSI தீர்மானம் எடுக்கும். தீர்மானம் முன்வாயிலின் நிலை நெடுவரிசையில் "Invoice" என தோன்றும்பொழுது, இறக்குமதியாளர் ஏற்ற பணத்தை Account No. 83973974, Sri Lanka Standards Institution, Bank of Ceylon, Super grade Branch, Borella இற்கு செலுத்த வேண்டும்.

2.6 இறக்குமதியாளரினால் அனுப்புபொதி அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிவிப்பு எந்த நோக்கத்திற்காகவும் தரச் சான்றிதழாக கருதப்படக் கூடாது. அறிவிப்பை இறக்குமதி

செய்யப்பட்ட எந்தவொரு பொருளையும் சந்தைப்படுத்துவதற்கான சான்றிதழாக இறக்குமதியாளர் அல்லது வேறு எந்த கட்சியும் பயன்படுத்தக் கூடாது.